LIBRARY
25 NOV 1968
STATE LEGISLATURE, MADRAS

தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1968 பிப்ரவரி 20

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் முற்பகல் 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள்

*80 **வினா—திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு கல்வித்-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணைய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை துவக்க அரசு கருதியுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : இனிமேலாவது அதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மதுரைப் பல்கலைக்கழக பகுதியிலே 6 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இருந்துகொண்டிருக்கின்றன. மதுரையிலே பெண்கள் பயிற்சிக் கல்லூரி வைக்கவேண்டுமென்று மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அது பரிசிலனையில் இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : தற்சமயம் நம் நாட்டில் போதிய பி.டி. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்களா? அல்லது ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்கள் போதிய அளவு வேலைவாய்ப்பு கிடைக்காமல் பலர் அந்தத் தொழிலுக்குப் போகாமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியிருக்கும்போது புதிதாக ஒரு கல்லூரியைத் திறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்றுதான் அரசு யோசித்துக்கொண்டு வருகிறது. இருபத்தோரு பயிற்சி பள்ளிகள் இப்போது இருக்கின்றன. இதிலே 1,300 பேர்கள் பயிலுவதற்கான வாய்ப்புகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கிற பயிற்சி கல்லூரிகளிலே போதுமான அளவுக்கு இடங்கள் இருப்பதனாலே

படித்து வருகின்றவர்கள் ஒரு ஆண்டு இரண்டு ஆண்டுகள் படித்து வருகின்றவர்களை அதிலிருந்து ஏற்றுக்கொள்ளமுடியும் என்ற அளவிலே நிலைமை இருக்கிறது. மேலும் ஆண்கள் பயிற்சிக் கல்லூரிகளைத்தவிர பெண்கள் பயிற்சிக் கல்லூரிகள் இல்லாததால், பெண்கள் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இது பரிசீலனையில் இருக்கிறது, முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆறு பயிற்சிக் கல்லூரிகள் மதுரை பல்கலைக்கழகத்தோடு இணைந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். அந்த ஆறு பயிற்சி கல்லூரிகளில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

*81 வினா.—**திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவையில் மேலும் ஓர் பி.டி. பயிற்சிக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. கே. விநாயகம் : கோயம்பத்தூர் நகரத்திலே இப்போது ஏதாவது பி.டி. கல்லூரி இருக்கிறதா? ஆண்கள் கல்லூரி பெண்கள் கல்லூரி என்று தனித்தனியாக கல்லூரிகள் இருக்கின்றனவா அவைகளிலே எத்தனை ஆசிரியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோயமுத்தூர் நகரத்திலே அரசினர் பயிற்சிக் கல்லூரி இருக்கிறது. கோயமுத்தூர் பக்கத்திலே பெரியநாயக்கன் பாளையத்தில் ஆண்களுக்கென்று பயிற்சிக் கல்லூரி இருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கத்தின் சார்பாக பயிற்சிக் கல்லூரி நிறுவப்படவேண்டுமென்று அவசியம் இல்லை என்று அரசு எண்ணுகிறது. அவனுசிலிங்கம் செட்டியார் அவர்களும் பி.எஸ்.ஜி. கல்லூரி கரஸ்பாண்டண்ட் அவர்களும் புதிதாகப் பயிற்சிக் கல்லூரி துவக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : துணைத்தலைவர் அவர்களே, சேலத்தில் பி.டி. மகளிர் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.